**நாள் 05.06.2025 STC 313/2021 அ.சா.1**

**பெயர் முருகன்**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் கு.வி)

(1) நான் ஊராட்சி மன்ற செயல் அலுவலர் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ல் செயல் அலுவலர் என்று தட்டச்சு செய்து வைத்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1யை நான் எனது கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். குறிப்பிட்டு யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எழுதப் படிக்க தெரியாது. அ.சா.ஆ.1 புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியும். பொதுமக்கள் மருத்துவ கழவுகளை கொட்டுவதாக சொன்னது எழுதப்பட்டுள்ளது. யார் சொன்னார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். எனக்கு தகவல் கொடுக்கப்பட்ட உடன் நான் காவல் நிலையம் வந்துவிட்டேன் என்றால் சரிதான். வரும்போது எனது லெட்டர் பேடை கொண்டு வந்துவிட்டேன் என்றால் சரிதான். வந்த நபர்கள் யாரோ எழுதினார்கள் என்றால் எங்கள் அலுவலக எழுத்தர் எழுதினார்.

(2) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பாறைக்குழியில் இருந்து காவல் நிலையத்திற்கு 10 நிமிடங்களில் வந்துவிடலாம் என்றால் சரியல்ல சுமார் ½ மணி நேரம் ஆகும். நாங்கள் எல்லோரும் பேசி முடிவு செய்து தான் காவல் நிலையம் வந்தோம் என்றால் சரிதான். என்னை பார்க்க வந்த நபர்கள் தான் புகார் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். நடக்காத சம்பவத்தை குறித்து பொய்யாக புகார் கொடுக்க ஆலோசித்து புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

(3) காவல் நிலையத்திற்கு மாலை 03.00 மணிக்கு வந்தேனா 04.00 மணிக்கு வந்தேனா அல்லது 05.00 மணிக்கு வந்தேனா என்றால் சாயங்காலம் வந்தேன் 4 மணி இருக்கும். என்னுடன் சுமார் 10-20 பேர் வந்திருப்பார்கள். 14.04.2021ம் தேதி காவல் நிலையம் வந்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் சுமார் ¼ மணி நேரம் இருந்தோம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு 1 மணி நேரத்தில் வீட்டிற்கு சென்றுவிட்டேனா என்றால் ஞாபகம் இல்லை. புகார் கொடுத்த அன்று வழக்கு சம்மந்தமாக எதிரிகளை நான் பார்த்தேன். எதிரிகள் பெயர் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

(4) எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து 4 மணிக்கு பார்த்தேன். சம்பவ சமயத்தில் என்னிடம் கைப்பேசி இருந்தது என்னிடம் தகவல் சொன்னவர்களிடம் கைப்பேசி இருந்தது. என்னிடம் உள்ள கைப்பேசியில் புகைப்படம் எடுக்கும் வசதி இருந்தது எனக்கு புகைப்படம் எடுக்கத் தெரியாது. என்னிடம் தகவல் வீட்டில் வந்து

சொன்னார்களா என்றால் நான் ராஜாராம் என்பவர் டீ கடையில் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்த போது தகவல் சொன்னார்கள் அங்கிருந்து எல்லோரும் காவல் நிலையம் வந்துவிட்டோம். நான் சொன்னது போல் எதிரிகள் எந்த குப்பையும் கொண்டு வரவில்லை என்றும் உடுமலைப்பேட்டையில் உள்ள குப்பை சுத்திகரிக்கும் நிலையத்தில் இருந்து கிடைக்கும் உரத்தை பெற்று விற்று வருகிறார் என்றும் நரசிங்காபுரத்தைச் சேர்ந்த நபர்கள் உரத்தை கேட்டு எதிரிகள் கொடுக்காததால் எதிரிகள் மீது பொய்யாக தகவல் கொடுத்து புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(5) போலீசார் புகார் கொடுத்த உடன் சம்பவ இடம் வந்து பார்வையிட்டார்கள் என்றால் சுமார் 5-6 மணிக்கு வந்தார்கள். பறைக்குழியில் எந்த கழிவும் கொட்டப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் பாறைக்குழியில் எந்த கழிவும் இல்லை என்றால் சரியல்ல. பாறைக்குழியில் கழிவு இல்லாததால் தான் புகைப்படம் எடுத்து நான் போலீசில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நரசிங்காபுரத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு வழக்கு சம்மந்தப்பட்ட வாகனத்தை நான் கொண்டு வந்தேன் என்றால் சரியல்ல. போலீசார் வந்து வாகனத்தை கொண்டு வந்தார்கள். யார் வாகனத்தை ஓட்டி வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. அந்த வாகனம் எங்கு நின்றிருந்தது என்று எனக்கு தெரியாது. இரவு நேரத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**நாள் 05.06.2025** **STC 313/2021** **அ.சா.2**

**பெயர் சகாதேவன்**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் கு.வி)

(1) நான் எனது முதல் விசாரணையில் டிப்பர் லாரியில் குழிப்பாறையில் மண் கொட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் மாலை 06.00 மணிக்கு நானும், வேலுச்சாமியும் கருப்புச்சாமி புதூருக்கு போனோம். டிப்பர் லாரியை பார்த்தோம் என்றால் சரிதான். டிப்பர் லாரி முகப்பில் என்ன பெயர் எழுதியிருந்தது என்றால் பார்க்கவில்லை. லாரி மஞ்சள் நிறத்தில் இருந்தது. அந்த சமயத்தில் என்னிடம் கைப்பேசி இருந்தது. என் உடன் வந்தவரிடம் கைப்பேசி இருந்ததா என்றால் இல்லை. நான் நேரடியாக யாரிடம் இது குறித்து சொன்னேன் என்றால் அருகில் உள்ளவர்களிடம் சொன்னேன். கொட்டிக்கொண்டிருந்த போது வாடை வந்தது என்னவென்று சென்று பார்த்த போது அங்கே ஊசி, கையுறைகள், மருந்து பாட்டில்கள் இருந்தது. இது குறித்து தலைவரிடம் சொன்னோம்.

(2) நான் நேரடியாக தலைவரிடம் சொல்லவில்லை வேறு நபர்கள் தகவல் கொடுத்தார்கள். சிறிது நேரம் கழித்து தலைவர் அங்கு வந்தார். புகாரை யார் எழுதினார்கள் என்றால் தெரியாது நிறைய நபர்கள் இருந்தார்கள். காவல் நிலையத்திற்கு மறு நாள் வந்தோம். காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. இந்த வழக்குச் சம்மந்தமாக போலீஸில் வேறு எப்போதும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். பால் வியாபாரம் செய்து வருகிறேன். உடுமலைப்பேட்டையில் உள்ள குப்பை சுத்திகரிக்கும் நிலையத்தில் இருந்து கிடைக்கும் உரத்தை பெற்று விற்று வருகிறார் என்றும் நாங்கள் உரத்தை கேட்டு எதிரிகள் கொடுக்காததால் எதிரிகள் மீது பொய்யாக தகவல் கொடுத்து புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எந்த கழிவும் கொட்டப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் தலைவர் வந்தார் என்று

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த கழிவும் கொட்டப்படாததால் தான் யாரும் புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்